**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 62** **நாள்: 02.05.2019**

**தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தும் வணிக நிறுவனங்களின் வணிக உரிமம் விதிமுறைகளுக்குட்பட்டு ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்**

= = = =

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் **01.01.2019 அன்று முதல்** தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் தமிழக அரசால் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர் சோதனைகளில் 01.01.2019 முதல் 02.05.2019 வரை 198 மெட்ரிக் டன் அளவிலான தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலும் தவிர்ப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.05.2019) ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை தவிர்க்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பொதுமக்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டும், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில், அறிவுறுத்துதல்களை மீறி தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துபவர்கள் மீது சட்ட விதிகளின் படி தாக்கீது வழங்கி நடவடிக்கைகள் தொடரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வணிக நிறுவனங்கள், சிறிய அளவிலான காய்கறி, பூக்கள் விற்பனையாளர்கள் மற்றும் இறைச்சி, மீன் வியாபார கடைகளில் தொடர்ந்து பயன்படுத்தும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுத்து அவ்வகையான பிளாஸ்டிக்கை பறிமுதல் செய்யவும், வணிகநிறுவனங்களின் வணிக உரிமத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு ரத்து செய்ய மேல்நடவடிக்கை தொடரவும், மண்டல அலுவலர்கள் மற்றும் சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.என்.மகேசன், மாநகர நல அலுவலர் டாக்டர் என்.ஏ.செந்தில்நாதன், மண்டல அலுவலர்கள், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், சுகாதார அலுவலர்கள் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**